TNKR080007482021

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9-ம் தேதி திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.226/2021**

**CNR No.TNKR08-000748-2021**

S.சந்திரமோகன் . . . வாதி

.... எதிர் .....

S.நாகரெத்தினம் . . . பிரதிவாதி

**தீர்ப்புரை**

பிரதிவாதியானவர் வாதிக்கு செலுத்த வேண்டிய தாவா தொகை மற்றும் அசல் கடன் தொகையினை வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 17.11.2021 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 04.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 09.03.2026 |
| வாதிக்காக | : | திரு.R.M.செந்தில் – வழக்கறிஞர் |
| பிரதிவாதிக்காக | : | திரு.R.ராஜு – வழக்கறிஞர் |

**1) பிராதின் சுருக்கம்**

இவ்வழக்கின் வாதியிடம், பிரதிவாதியானவர் அவரது அவசர நிமிர்த்தம் மற்றும் குடும்ப செலவிற்காக வேண்டி கடந்த 17.11.2019-ம் தேதி அன்று ரூ.4,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு 18% வட்டியுடன் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, அன்றைய தினமே சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதிச் சீட்டு பிறப்பித்துக்கொடுத்துள்ளார். பின்னிட்டு, பிரதிவாதியானவர்

வாதியிடம் பெற்ற கடன் தொகையினை திரும்ப செலுத்தவில்லை என்பதால் மேற்படி வாதியானவர் பிரதிவாதிக்கு கடந்த 30.12.2020ம் தேதி அன்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்ப, மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு பிரதிவாதியானவர் வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையினை திரும்ப செலுத்தாமல் இருந்ததோடு அல்லாமல், பிரதிவாதிக்கு சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்ய முயன்று வருகிறார். எனவே, வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.4,93,067/-ஐ 12% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-**

வாதியின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. பிரதிவாதியானவர் எக்காலத்திலும் வாதியிடம் கடன் தொகை எதுவும் பெறவில்லை. பிரதிவாதியானவர், தண்ணீர்பள்ளியை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மகன் வெங்கடேஷ் என்பவரிடம் ரூ.1,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் மட்டும் செய்யப்பட்ட கடனுறுதி சீட்டை பிறப்பித்துக்கொடுத்துள்ளார். மேற்படி வெங்கடேஷ் என்பவர் வாதியிடம் மேற்படி கடனுறுதி சீட்டை கொடுக்க, அதனை பெற்ற வாதி அதனை ரூ.4,00,000/-த்திற்கு பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி சொத்து எதனையும் விற்பனை செய்ய முயற்சிக்கவில்லை. மேற்படி கடனுறுதி சீட்டானது மோசடியான ஒன்றாகும். மேற்படி வெங்கடேஷ் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார். எனவே, வாதியின் வழக்கினை பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**3) வழக்குரை, எதிர்வழக்குரை, வழக்கு கோப்பில் உள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் பின்வரும் எழுவினாக்களை வனைந்திருந்தது.**

**1** Whether the plaintiff is entitled to the suit amount as prayed for?

**2** To what other relief the plaintiff is entitled to?

**4)** வாதி தரப்பில், வாதி சந்திரமோகன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி நாகரெத்தினம் பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5)** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

**6)** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கவில்லை என்பதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வாதியின் வழக்கினை பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**7) எழுவினா ஒன்றிற்கான தீர்வு :–**

***(1)*** *Whether the plaintiff is entitled to the suit amount as prayed for?*

**7 (1)** வா.சா.1 அவரது முதல் விசாரணையில், இவ்வழக்கின் வாதியிடம், பிரதிவாதியானவர் அவரது அவசர நிமிர்த்தம் மற்றும் குடும்ப செலவிற்காக வேண்டி கடந்த 17.11.2019–ம் தேதி அன்று ரூ.4,00,000/– கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு 18% வட்டியுடன் திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, அன்றைய தினமே சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதிச் சீட்டு பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்றும், பின்னிட்டு, பிரதிவாதியானவர் வாதியிடம் பெற்ற கடன் தொகையினை திரும்ப செலுத்தவில்லை என்பதால் மேற்படி வாதியானவர் பிரதிவாதிக்கு கடந்த 31.12.2020–ம் தேதி அன்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்ப, மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கு பின்னிட்டு பிரதிவாதியானவர் வாதிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையினை திரும்ப செலுத்தாமல் இருந்ததோடு அல்லாமல், பிரதிவாதிக்கு

சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்ய முயன்று வருகிறார் என்றும், எனவே, வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடன் மற்றும் வட்டி தொகையான ரூ.4,93,067/-ஐ 12% வட்டியுடன் செலுத்த உத்தரவிடக்கோரி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

7 (2) பிரதிவாதி தரப்பில், வாதியிடம் கடன் தொகை எதுவும் பெறவில்லை எனவும், தண்ணீர்பள்ளியை சேர்ந்த ஒரு கோபாலகிருஷ்ணன் மகன் வெங்கடேஷ் என்பவரிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டு, அதற்காக பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் மட்டும் செய்து கொடுத்த கடனுறுதி சீட்டினைக் கொண்டு வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்பதே பிரதிவாதியின் எதிர்வாதம் ஆகும்.

7 (3) வாதியிடம் பிரதிவாதியானவர் கடந்த 17.11.2019-ம் தேதி அன்று ரூ.4,00,000/-ம் கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி கடனுக்கு ஆதரவாக சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதிச்சீட்டு பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கின்ற சங்கதியை நிரூபணம் செய்வதற்கு வாதி தரப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7 (4) ***Indian Evidence Act, பிரிவு 114-ல், Court may presume existence of certain facts. — The Court may presume the existence of any fact which it thinks likely to have happened, regard being had to the common course of natural events, human conduct and public and private business, in their relation to the facts of the particular case.***

***(c) that a bill of exchange, accepted or endorsed, was accepted or endorsed for good consideration;*** என கூறப்பட்டுள்ளது. அவ்வித்தில், வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது சரியான மறுபயனுக்காகவே பிறப்பித்துக்கொடுக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அனுமானிக்கலாம்.

7 (5) பிரதிவாதி தரப்பில், மேற்படி வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டை ஒரு கோபாலகிருஷ்ணன் மகன் வெங்கடேஷ் என்பவருக்கு பிறப்பித்துக்கொடுத்ததாக

கூறியுள்ள நிலையில், மேற்படி சங்கதியை நிரூபணம் செய்ய வேண்டிய சுமையானது பிரதிவாதியை சார்ந்ததாகும். அவ்விதத்தில், பிரதிவாதி கூறியுள்ளது போன்று வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டானது வாதிக்கு பிறப்பித்துக்கொடுக்கப்படவில்லை என்கின்ற சங்கதியையும், கோபாலகிருஷ்ணன் மகன் வெங்கடேஷ் என்பவருக்கு பிறப்பித்துக்கொடுக்கப்பட்டுள்ளது என்கின்ற சங்கதியையும் பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை. எதிர்வழக்குரையில் ஒரு சங்கதியை தெரிவித்ததாலேயே அதனை நிரூபணம் செய்யப்பட்ட பொருண்மையாக கருத இயலாது. மேற்படி சங்கதிக்கு ஆதரவாக வாதி தரப்பில், பிரதிவாதிக்கு அனுகூலமான பதில் எதனையும் பெறப்படவில்லை.

**7 (6)** மேலும், பிரதிவாதியானவர் அவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வெங்கடேஷ் என்பவரிடம் ரூ.1,00,000/- கடனாக பெற்றதாக கூறியுள்ள நிலையில், அவரது குறுக்கு விசாரணையில், ***"மேற்படி வெங்கடேஷிடம் எவ்வளவு கடன் வாங்கினேன் என்றால் ஈட்டுக்கடனாக ரூ.5,00,000/- வாங்கினேன். எந்த ஆண்டு வாங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை...... என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி கையெழுத்து என்னுடையது இல்லை என்கின்ற விவரத்தை முதல் விசாரணையிலோ, எதிர்வழக்குரையிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் பூர்த்தி செய்யப்படாத புரோநோட்டில் தான் கையெழுத்து செய்ததாக கூறியுள்ளேன் என்றால் இல்லை"*** என முரண்பட்டு கூறியுள்ளார். எனவே, மேற்படி பிரதிவாதியின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், நம்பத்தகுந்தவையாகவும் இல்லை.

**7 (7)** வாதியிடம், பிரதிவாதியானவர் கடந்த 17.11.2019-ம் தேதி அன்று ரூ.4,00,000/- கடன் பெற்றுக்கொண்டு, அதற்காக கடனுறுதி சீட்டு பிறப்பித்துக்கொடுத்துள்ளார் என்கின்ற சங்கதியை வா.சா.ஆ.1 ஆவணத்தின் வாயிலாகவும், பிரதிவாதி பெற்ற கடன் தொகையினை வாதி கேட்டு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்கின்ற சங்கதியை வா.சா.ஆ.2 அறிவிப்பின் வாயிலாகவும், மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்டுள்ளார் என்கின்ற சங்கதியை வா.சா.ஆ.3 ஒப்புதல் அட்டையின் வாயிலாகவும், வாதியிடம் பெற்ற கடன்

தொகையினை பிரதிவாதி செலுத்தவில்லை என்கின்ற சங்கதியையும் வாதி தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா ஒன்றிற்கு விடை காணப்படுகிறது.

**8) எழுவினா இரண்டிற்கான தீர்வு :–**

*(2) To what other relief the plaintiff is entitled to?*

முதல் எழுவினா வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் வழக்கின் செலவு தொகையினை வாதி பெறுவதற்கு வாதிக்கு உரிமையுண்டு. இவ்வாறாக, எழுவினா இரண்டிற்கு தீர்வு காணப்படுகிறது.

**9) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** வாதிக்கு, பிரதிவாதியானவர் தாவா தொகையான ரூ.4,93,067/–ம் மற்றும் அசல் கடன் தொகை ரூ.4.00,000/–க்கு தாவா தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வருட வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும் காலம் வரையிலான காலத்திற்கு 6% வட்டியுடன் இரண்டு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 9–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.09 15:21:22 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சிகள் :–**

வா.சா.1. – சந்திரமோகன் (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.11.2019 | கடனுறுதி சீட்டு |
| வா.சா.ஆ.2 | 30.12.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.3 | -- | அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**பிரதிவாதி தரப்பு சாட்சி :–**

பி.வா.சா.1 – நாகரெத்தினம் (பிரதிவாதி)

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.09 15:21:27 +0530

**சார்பு நீதிபதி,**
**குளித்தலை.**